இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 26-08-2024

# சூப்பர் ஸ்டாரின் பாராட்டு!

**மாண்புமிகு அமைச்சர் எ.வ. வேலு அவர்கள் எழுதிய 'கலைஞர் எனும் தாய்' நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் ஆற்றிய உரை என்பது இதயத்தின் அடியாழத்திலிருந்து ஆற்றிய உரையாக அமைந்திருந்தது.**

**முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இருவரையும் மிகப்பெரிய ஆளுமைகளாக வியந்து பேசினார் ரஜினி காந்த் அவர்கள். பொதுவாக மேடைகளுக்கு வருவதில்லை, அதிலும் குறிப்பாக அரசியல் மேடைகளுக்கு வருவது இல்லை என்பதைத் தெளிவுபடுத்தி விட்டு, அவர் பேசிய அரசியல் என்பது மிகமிகத் தெளிவானது.**

**"சுற்றி இருக்கும் ஐம்பது பேருக்காக வாழ்ந்து செத்துப் போவதுதான் மனிதனின் இயல்பு. ஆனால் இனத்துக்காக, மொழிக்காக, சமூகத்துக்காக தனது ஒட்டு மொத்த வாழ்க்கையையும் ஒப்படைத்து வாழ்வதுதான் பெரிய பேறு. அத்தகைய வாழ்க்கை வாழ்ந்தவர் கலைஞர்"** என்ற வரியில் தலைவர் கலைஞரின் ஒட்டு மொத்த போராட்டக் குணத்தையும், அருந்தொண்டையும் அடக்கிச் சொன்னார் ரஜினிகாந்த் அவர்கள்.**"கலைஞர் அனுபவித்த துன்பத்தை வேறு ஒருவர் அனுபவித்திருந்தால் அவர்கள் எப்போதோ காணாமல் போயிருப்பார்கள். ஆனால் கலைஞரால் மட்டும்தான் இன்று வரை பிரகாசிக்க முடிகிறது. அவர் மறைவுக்குப் பிறகு தான் அதிகமாக நினைக்கப்படுகிறார். இனி தான் அவர் அதிகமாக நினைக்கப்படுவார்"** என்றார் ரஜினி காந்த் அவர்கள்!

"ஒரு மனிதனின் வரலாறு என்பது அவனது மரணத்துக்குப் பிறகு கணக்கிடப் பட வேண்டும்" என்று சொன்னவர் தலைவர் கலைஞர். ரஜினிகாந்த் எடுத்துரைத்த கருத்து என்பது இந்தச் சொல்லின் விரிவாக்கமாக அமைந்திருந்தது.

**"முதலமைச்சராக இருந்தாலும் இல்லாவிட்டாலும் கலைஞர் ஒரே மாதிரிதான் இருப்பார். வீட்டு வாசலில் அதிகமாக போலீஸ் இருந்தால் அவர் முதலமைச்சராக இருக்கிறார் என்று அர்த்தம். இல்லாவிட்டால் இல்லை என்று அர்த்தம். அவரைச் சந்திக்கும் போது அதில் எந்த வேறுபாட்டையும் பார்க்க முடியாது"** என்றார் ரஜினி காந்த் அவர்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருகாலத்தில் அளித்த பாராட்டைத்தான் நினைவூட்டியது ரஜினிகாந்த் அவர்களின் பாராட்டு.

"தண்டவாளத்தில் தலைவைத்துப் படு என்றாலும், அமைச்சர் பதவியை ஏற்றுக் கொள் என்றாலும் இரண்டையும் ஒன்றாகக் கருதுபவர்தான் என் தம்பி கலைஞர் கருணாநிதி" என்றார் பேரறிஞர் அண்ணா. அரசியல் எல்லைக்கு வெளியில் இருந்து ரஜினிகாந்த் அவர்கள் இதே கருத்தைச் சொன்னார்கள். பதவியாக அல்ல பொறுப்பாக உணர்ந்து கலைஞர் அவர்கள் செயல்பட்டார், செயல்பட வைத்தார் என்பதை உணர்த்துவதாக இருந்தது அது.

தமிழினத் தலைவர் கலைஞரது வழித்தடத்தில் இன்றைய முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் எத்தகைய சீரோடும் சிறப்போடும் கட்சியையும், ஆட்சியையும் நடத்தி வருகிறார் என்பதையும் ரஜினிகாந்த் அவர்கள் மனமுவந்து பாராட்டினார்கள்."சில தலைவர்கள் மறைந்ததற்குப் பிறகு அந்தக் கட்சிகள் எப்படி கலகலத்துப் போய்விடுகின்றன" என்பதைக் கிண்டலாகக் குறிப்பிட்ட ரஜினி அவர்கள்,**"கலைஞர் அவர்கள் மறைவுக்குப் பிறகு நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் வென்று காட்டிவிட்டார் இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இதுதான் அவரது உழைப்புக்கும் ஆளுமைத்திறனுக்கும் கிடைத்த வெற்றி"** என்றார் ரஜினிகாந்த் அவர்கள்.

மாக்சிம் கார்க்கி எழுதிய 'தாய்' காவியத்தில் புரட்சியாளர்கள் இலியிச் லெனினும் ஜோசப் ஸ்டாலினும் வருவார்கள். 'தாய்' காவியத்தை கலைஞர் அவர்கள் இப்படித் தொடங்குவார்கள்...

**"இருட்டுக்குள் ரஷ்ய பூமி**
**இடர் பட்டுக் கிடந்த போது**
**ஏறனைய லெனின் ஸ்டாலின்**
**இருதலைவர்களுடன் இணைந்து**
**எழுச்சி முரசு கொட்டி**
**எத்தனை முறையோ சிறைப்பட்டு**
**எழுத்து வடிவிலும் எப்போதும் மணம் வீசும் பூ!**
**மாக்சிம் கார்க்கியாம் மனிதநேய மாண்பு!**
**மன்பதைக்குத் தந்திட்ட சிகப்பு பூ! செம் பூ!**
**அன்னை என்றும் தாய் என்றும்**
**அழைக்கப்படும் அற்புதப் பூ!**
**பல மொழிகளில் மணம் பரப்பும் அப்பூவை**
**கலை வண்ணமுடன்**
**கவிதை நடையில் வழங்குகின்றேன்"** என்றுதான் அந்த நூல் தொடங்கும். இதோ தமிழ்நாட்டின் 'தாய்'க்காவியத்தில் தலைவர் கலைஞரும், இன்றைய முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலினும் இணைந்து எழுச்சி முரசு கொட்டி எத்தனையோ முறை சிறைப்பட்டு இந்த மானுடம் பயனுற நல்ல பல திட்டங்களைத் தீட்டி முன்மாதிரி மாநிலமாக வளர்த்து வருகிறார்கள் என்பதை நாம் பார்க்கிறோம்.

ரஷ்ய புரட்சி ஏற்படுவதற்கு பத்தாண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்டது 'தாய்' காவியம். புரட்சிக்கு அடித்தளம் இட்டது 'தாய்' காவியம். அம்மா நீலவ்னாவை புரட்சியாளராக ஆக்கினான் மகன் பாவெல். அன்னை அஞ்சுகம் அம்மையார் குறித்து பேரறிஞர் அண்ணா எழுதிய கட்டுரையும் ரஷ்யத் தாயைத் தான் நினைவூட்டும். "நான் அஞ்சுகம் அம்மாவை சந்திக்கும் போதெல்லாம் கழகத்தைப் பற்றித்தான் பேசுவார்" என்று எழுதி இருப்பார் அண்ணா. பேரறிஞர் பெருந்தகையை 'அண்ணா தம்பி' என்று அழைத்த ஒரே அன்னை அஞ்சுகம் அவர்கள்தான்.

"இன்றைக்கு நாங்கள் வீணாக அலைவது போல உனக்குத் தெரியலாம் அம்மா! ஒரு காலம் வரும். அப்போது நாங்கள் பேசிய கொள்கை அனைத்தையும் செயல்படுத்திக் காட்டுவோம் அம்மா" என்று அஞ்சுகம் அம்மையாரிடம் தான் சொன்னதாக கலைஞர் அவர்கள் எழுதி இருக்கிறார்கள். இதுதானே அரை நூற்றாண்டு வரலாறு!

ரஷ்யத் 'தாய்' உருவாக்கியது ஒரு பாவெல் அல்ல. அதையும் தான் மிகச் சரியாகச் சொன்னார் ரஜினிகாந்த் அவர்கள். **"இப்போதுதான் அரசியலில் நுழைந்து கடினமாக உழைத்து, பேச்சில் தனக்கென ஒரு பாணியை உருவாக்கிக் கொண்டு, மக்கள் மத்தியிலும் தொண்டர்கள் மத்தியிலும் அருமையான, பெயர், புகழ் பெற்று அரசியலில் தனக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கிறார் உதயநிதி ஸ்டாலின்"** என்று ஒவ்வொரு சொல்லையும் அளந்தெடுத்து சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் சொன்னபோது அரங்கம் அதிர்ந்தது. **"அடுத்த ஐம்பது ஆண்டுகள் இயக்கத்தை வழிநடத்தப் போகிறவர் மாண்புமிகு உதயநிதி அவர்கள்"** என்று அமைச்சர் எ.வ.வேலு சொன்னபோதும் அரங்கம் அதிர்ந்தது.

கொள்கைகள், அதனை வழிநடத்தும் தலைவர்களை உருவாக்கிக் கொண்டே இருக்கின்றன. தலைவர்கள், தாங்கள் பேசிய கொள்கை நாட்டை உருவாக்கிக் கொண்டே இருப்பார்கள். 'தாய் காவியம்' என்பது தத்துவத்தின் காவியம் தானே! 'திராவிட' காவியம் அல்லவா தமிழ்நாடு! திராவிட முன்னேற்றக் கழகம்!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.8.2024) சென்னையில் நடைபெற்ற நடிகர் சின்னி ஜெயந்த் மகன் சுருதன்ஜெய், மனஸ்வினி ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்வின்போது, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் ஆகியோர் உடனிருந்தனர்.

### மெரினா கடற்கரையில் 'நம்ம மெரினா நம்ம பெருமை' விழிப்புணர்வு இயக்கத்தைத் தொடங்கி வைத்தார்!

# அதிநவீன கடற்கரை மோட்டார் வாகனங்கள்!

## அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இயக்கி வைத்தார்!

சென்னை, ஆக.26-

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் நேற்று (25.08.2024) மெரினா கடற்கரையில் நடைபெற்ற "நம்ம மெரினா நம்ம பெருமை" என்ற விழிப்புணர்வு இயக்கத்தினை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் தலைமையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து, மெரினா மற்றும் பெசன்ட் நகர் கடற்கரையில் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கான அதிநவீன கடற்கரை மோட்டார் வாகனங்கள், நீர்நிலைகளைத் தூர்வாரும் ரோபோடிக் இயந்திரங்கள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட கடற்கரை சுத்தம் செய்யும் இயந்திரங்களின் செயல்பாடுகளை இயக்கி வைத்து, 411 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, 50 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தொடர்ந்து, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் "நம்ம மெரினா நம்ம பெருமை" விழிப்புணர்வு இயக்கத்தில் கடற்கரையை தூய்மையாக பராமரிக்க புதிதாக வைக்கப்பட்டுள்ள மக்கும், மக்காத குப்பைகளை போடும் வகையிலான பல்வடிவ குப்பைத் தொட்டிகளைப் பார்வையிட்டார். மேலும், இந்த விழிப்புணர்வு இயக்கத்தில் கலந்து கொண்டு, பொதுமக்களுக்கு கடற்கரையினை சுத்தமாக வைத்துக் கொள்வதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திய 10 குழந்தை தூதுவர்களைப் பாராட்டி சான்றிதழ்களை வழங்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி மத்திய வட்டாரத்திற்குட்பட்ட தேனாம்பேட்டை மண்டலம் மற்றும் தெற்கு வட்டாரத்திற்குட்பட்ட அடையாறு மண்டலத்தில் உள்ள பெசன்ட் நகர் கடற்கரைப் பகுதிகளுக்கு தினந்தோறும் பல ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வந்து செல்கின்றனர். அவ்வாறு வரும் பொதுமக்களாலும், அங்குள்ள சிறுசிறு கடைகளாலும் மணற்பரப்பு பகுதியானது அசுத்தம் ஆகிறது. இதுகுறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்துவதும், கடற்கரைப் பகுதியில் உள்ள சிறு சிறு கடைகளை கண்காணித்து ஒழுங்குப்படுத்துவதும் அவசியமாகிறது

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்கள் மிக நீண்ட மெரினா கடற்கரையினையும், பெசன்ட் நகர் கடற்கரையினையும் அழகுடனும், பொலிவுடனும் கண்காணிக்க ஏதுவாகவும், பொதுமக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தவும், மணற்பரப்பில் உள்ள கடைகளை கண்காணித்து துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாகவும், அனைத்து விதமான நிலப்பரப்பிலும் இயக்கக் கூடிய நான்கு சக்கர அதிநவீன கடற்கரை மோட்டார் வாகனங்கள் (All Terrian VehicleATV) தலா ரூ.16 இலட்சம் வீதம் ரூ.48 இலட்சம் மதிப்பில் 3 ரோந்து வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் இன்று பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டது.

**ரோபோடிக் மல்டிபர்பஸ் எஸ்கவேட்டர்!**

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் பராமரிக்கப்படும் நீர்நிலைகளில் 3.5 மீ. கீழ் அகலம் குறைவாக உள்ள கால்வாய்களை பராமரிக்க மனிதர்களை பயன்படுத்தாமல் ரோபோடிக் மல்டிபர்பஸ் எஸ்கவேட்டர் (Robotic Multi Purpose Excavator) போன்ற அதிநவீன இயந்திரங்களை பயன்படுத்தி தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

இதனடிப்படையில் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, தூய்மை இந்தியா திட்ட சேமிப்பு நிதியின் கீழ், தலா ரூ.6,48,86,888/ வீதம் ரூ.12,97,73,776/ மதிப்பில் 2 எண்ணிக்கையிலான ரோபோடிக் மல்டிபர்பஸ் எஸ்கவேட்டர் (Robotic Multipurpose Excavator) இயந்திரங்கள் மற்றும் 5 வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பிற்கு ரூ.9,82,34,076/ என மொத்தம் ரூ.22.80 கோடி மதிப்பில் ஐரோப்பா கண்டத்தில் உள்ள லிச்டென்ஸ்டைன் நாட்டிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் இன்று பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டது.

மெரினா மற்றும் பெசன்ட் நகர் கடற்கரை மணற்பரப்பை சுத்தம் செய்ய 7 எண்ணிக்கையிலான மணற்பரப்பை சுத்தம் செய்யும் இயந்திரங்கள் 2019 ஆண்டு கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இந்த இயந்திரங்களின் தொடர் பயன்பாடு மற்றும் தேய்மானத்தின் காரணமாக அதன் திறன் பயன்பாடு குறைந்துள்ளது. இந்த இயந்திரங்களின் முழு திறனைபெறுவதற்கு ஏதுவாக, முதற்கட்டமாக 2 இயந்திரங்களில் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்பொழுது பணியில் ஈடுபடுத்த ப்பட உள்ளது. இதனால் கடற்கரை மணற்பரப்பினை சுத்தம் செய்யும் பணிகள் திறம்படவும், துரிதமாகவும் மேற்கொள்ளப்படும்.

**பணி நியமன ஆணைகள்!**

பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்து பணியிடை காலமான பணியாளர்களின் குடும்ப நலனைக் கருத்தில் கொண்டு, அப்பணியாளர்களின் வாரிசுதாரர்களான 253 ஆண்கள், 158 பெண்கள் என மொத்தம் 411 நபர்களுக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கும் அடையாளமாக 50 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மேயர் திருமதி ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், துணை மேயர் மு.மகேஷ்குமார், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமர குருபரன், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி.ஜெயசந்திர பானு ரெட்டி, நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், நிலைக்குழுத் தலைவர்கள் க.தனசேகரன் (கணக்கு), டாக்டர் கோ. சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), திருமதி சர்பஜெயா தாஸ் நரேந்திரன் (வரிவிதிப்பு (ம) நிதி), தா.இளைய அருணா (நகரமைப்பு), நியமனக் குழு உறுப்பினர்கள் இராஜா அன்பழகன், சொ.வேலு, மாமன்ற ஆளுங்கட்சித் துணைத் தலைவர் காமராஜ், மாமன்ற உறுப்பினர் திருமதி ரா. மங்கை, உள்ளிட்ட மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

